மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கம் அந்த ஆக்கிரமிப்பை அகற்றி, அந்த இடத்தை பள்ளிக்குக் கொடுக்கவேண்டும் என்றுதான் டி..ஆர்.ஓ. பரிந்துரை செய்திருக்கிறார். ஹைகோர்ட் ஸ்டே எடுக்கப்பட்ட வுடன் தான் என்க்ரோச்மென்டை அகற்ற அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்.

Licence for cotton transport

320 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government of Tamil Nadu has increased the fee for renewal of annual general licence for Cotton transport from Rs. 200 to Rs. 300 a year; and

(*b*) if so, why?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ)-உம் (இ)-உம் பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் இது குறித்து விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

திரு. கே. விநயகம் : இந்த பருத்தி ஏற்றுமதி செய்வதற்கு 200 ரூபாயாக இருந்த பீசை 300 ஆக உயர்த்தியிருப்பதனல் அரசாங்கத்திற்கு வருகிற மொத்த லாபம் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அனுப்பப்படுகிற பருத்தியின் தரத்தைப் பரிசோதித்தல், செலவுக்கணக்கைச் சரி பார்த்தல் போன்ற பல வேலைகளுக்குச் சர்க்கார் அதிகாரிகளைப் போடவேண்டியிருக் கிறது. ஆகவேதான் 200-இல் இருந்து 300-ஆக பீஸ் உயர்த்தப்பட்டதே தவிர தவிர வேறு இல்லை.

Cocoa plantations

* 321 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether a large number of acres are to be brought under Cocoa plantations in this State during 1970–71; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : கொக்கோ பயிருக்குத் தேவையான மழை வளம், நிலவளம் கன்னியாகுமரி ஜில்லாவில் இருக்கிறது. அது அதிக வருவாய் உள்ள பயிர். ஆகவே ரப்பர் தோட்டம் போன்று கொக்கோ ப்ளான் டேஷனுக்கும் திட்டம் வகுக்க அரசாங்கம் முன்வருமா?

---

* 457-458-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.